முருகப்பெருமான் துணை

**மகான் ராகுபகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.09.2022**, சனிக்கிழமை

1. ஆறுமுகனார் அவதார வடிவே
அரங்கமகானாய் கலி தன்னில்
மாறுதலை உலகோர்க்கு செய்ய
மாதவசியாய் வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசிபட சுபகிருது யாளி திங்கள்
அறிவிப்பேன் முப்பானீர் திகதி காரிவாரம்

(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 32 நாள், 17.09.2022 சனிக்கிழமை)

3. வாரமதில் ராகுபகவான் யானும்
வையகம் பாதுகாப்புற உரைப்பேன்
சோரமிலா ஞானவான்கள் படையை
சுத்தநெறி வழி அரங்கன் படைக்க
4. படைக்கவே உயர் மார்க்கம்தன்னை
பாருலகோர் தடையற ஏற்றுவர
பீடை சோடை நச்சுக்கிருமி வழி
பிரச்சினை பேரிடர் அனுகாத வண்ணம்
5. வண்ணமுடன் சகல பாதுகாப்பும்
வையகத்தில் பெற்று சிறப்பர்
அண்ணலின் அருளமுதை உண்ண
ஆரோக்கியம் ஆயுள்கூடி வாழ்வர்
6. வாழ்வினில் நாக தோடமிடரால்
வாழ்க்கை அமையா மன்றல் மேவி
தாழ்வான நிலை கொண்டவரெல்லாம்
தவராஜன் பிரணவக் குடிலை நாடி
7. நாடியே திருவடி தீட்சை தன்னை
ஞானி அரங்கனிடம் ஏற்று
தேடியே ஞானிகள் பூசை செய்து
தேசிகனார் வழிகாட்டும் அன்னதான
8. அன்னதான சேவை தன்னை
அகிலமெங்கிலும் பரப்பிவர
நன்னயமாய் இறை ஆற்றல் கூடி
ஞாலமதில் ஞானவான்கள் படைக்கும்
9. படைக்கும் உயர் சீடர்களாக
பாலதண்டாயுதன் அருள் பெற்ற
படைகளாக ஞானிகள் ஆகவே
பாருலகில் அற்புதம் காண்பர்

10. காண்கவே கலியிடர் வெல்லும்
கந்த வேலனின் உயர் சபை
மேன்மை கூடிய பிரணவக்குடிலாகும்
முருகப்பெருமானின் ஏழாம்படைவீடு ஆகும்

11. ஆகவே அரங்கமகானின் அருள்வழி
அறம் வழி சிறந்த வழியென
செகத்தார் வணங்கி வருகவே
சித்திமிகு கண்டு தேறுவர்
அருளாசி முற்றே

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி

நவகிரக நாயகர்களின் நூல் வரிசையில் மகான் இராகுபகவான் அருளியுள்ள அருளாசி நூலின் சாரம் :–

உலக ஞானத்தலைவன் மகான் முருகப்பெருமான் வகுத்துள்ள சன்மார்க்க கொள்கைகளை கடைப்பிடித்து வரும் அன்பர்களுக்கு உலகை ஆட்டிப் படைக்கும் நச்சுக்கிருமிகளால் எந்த இடையூறும், பாதிப்பும் வராது என்று மகான் இராகுபகவான் அருளியுள்ளார்கள்.

ஒரு சிலருக்கு செவ்வாய் தோஷம் இருக்கிறது என்று திருமணம் தடைபடும். மேலும், ஒரு சிலர் ஜாதகத்தில் தோஷம் இருப்பதால் தனக்கு நேரம் சரியில்லை என்று வருத்தப்படுவார்கள். இவர்கள் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் எனப்படும் மாமிச உணவினை மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு, மகான் முருகப்பெருமான் திருவடிகளை தொடர்ந்து பூசித்து, ஓங்காரக்குடிலாசான் சுட்டிக்காட்டும் அன்னதான சேவைகளை முழுமனதோடு செய்து வந்தால் இந்தவித தோஷங்களால் எந்த பாதிப்பும் வராது என்று மகான் ராகுபகவான் அருளியுள்ளார்கள். மகான் முருகப்பெருமான் திருவடிகளை பூசித்து சைவத்தை மேற்கொள்ளும் மக்களுக்கு நவகிரகங்களால் நன்மை மட்டுமே உண்டாகும். அவர்களுக்கு நவகிரகங்களால் எந்தவித தீமையும் ஏற்படாது. பூசித்து ஆசி பெறும் மக்களுக்கு செய்வினையாகிய ஏவல் போன்றவற்றை செய்ய முடியாது என்று மகான் இராகுபகவான் உபதேசித்துள்ளார்கள். மேலும் ஞானபண்டிதன் முருக பெருமானின் ஏழாம்படை வீடான துறையூர் ஓங்காரக்குடிலில் அவதரித்திருக்கும் ஓங்காரக்குடிலாசானிடம் ஆசி பெற்று அன்னதான தீட்சை பெறுபவர்களுக்கு இறைசிந்தனையோடு ஞானம் கைகூடி ஞானவான்களாக மாறக்கூடிய வாய்ப்பும் கிடைக்கும் என்றும் மகான் இராகுபகவான் தனது அருளாசி நூல் மூலம் அருளியுள்ளார்கள்.

சைவத் தலைவன் சண்முகனைப் போற்றிட
வையகம் போற்ற வாழ்வார் நலமே!

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

.........